# இராஜபாளையம் நகராட்சி

**28.05.2018**

திருவள்ளுவர் ஆண்டு 2047 விளம்பி வருடம் வைகாசி மாதம் 14ம் தேதி 2018ம் வருடம் மே மாதம் 28ம் தேதி திங்கட்கிழமை இந்நகராட்சியின் பி.எஸ்.குமாரசாமி ராஜா நினைவுக் கூட்ட மண்டபத்தில் மாலை 04.00 மணிக்கு இந்நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்

**வருகை– திரு.க.அச்சையா, எம்.எஸ்.சி.,எம்.பில் தனி அலுவலர்**

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களின் அறிவுறுத்தலின்படி

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் நுண் உரம் செயலாக்க மையம் (micro compost processing centre) அமைக்கவும், அதற்கான நிதி ரூ195.00 லட்சம் மான்யமாக ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2711/2018)
நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கப்பட வேண்டிய இடம்:

| வ.எண் | இடம் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மங்காபுரம், நகராட்சி பழைய மாட்டுக்கொட்டத்தில் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்கம் மையம் அமைத்தல் பணி மேற்கொள்ள | 81.50 |
| 2. | ஸ்ரீரெங்கபாளையம் 5.00 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள | 81.50 |
| 3. | மாடசாமி கோவில் ரோடு 60 அடி குறுக்கு சாலையில் 2.00 மெட்ரிக் டன் நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள | 32.00 |
| | மொத்தம் | 195.00 |

அ.கு

1. மேற்கண்ட இடங்களில் நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கவும் அதற்கான நிதி ரூ.195.00 லட்சத்தினை மான்யமாக ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.532அனுமதிக்கப்பட்டது**

2. இந்நகராட்சி பகுதியில் அன்றாடம் சேகரிக்கப்படும் குப்பைகளை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது. அவைகளுடன் ஏற்கனவே கொட்டப்பட்டுள்ள குப்பை கழிவுகளை அன்றைய தினமே நிலத்தில் கொட்டப்படாமல், பூஜ்ஜியம் கழிவு என்ற நிலை உருவாக்க அவைகளை பயன் உள்ள முடிவு பொருள்களாக ( END PRODUCT) மாற்றம் செய்ய நகராட்சி உரக்கிடங்கில் உயிரி சுரங்கம் (Bio Mining) அமைக்கவும் அதற்கான நிதி ரூ.434.00 லட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வேண்டி தயாரிக்கப்பட்டுள்ள விரிவான திட்ட

அறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களின் அனுப்பவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2711/2018)

அ.கு

1. இந்நகராட்சி உரக்கிடங்கில் உயிரி சரங்கம் அமைக்கவும், அதற்தாகும் செலவின தொகையினை ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வேண்டி விரிவான திட்ட அறிக்கையினை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.533அனுமதிக்கப்பட்டது**

3. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மூன்று இடங்களில் தலா 5 மெட்ரிக் டன் திறனுடைய இரண்டும், 2 மெட்ரிக் டன் திறனுடைய ஒன்றும் ஆக மொத்தம் மூன்று இடங்களில் நுண் உரம் செயலாக்க மையம் அமைக்க திட்டமிட்டட்டு மதீப்பீடு தொகை ரூ195.00 லட்சம் மான்யமாக ஒதுக்கீடு செய்ய வேண்டியும், நிர்வாக அனுமதி வேண்டியும் விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்ற அனுமதி பெறப்பட்டது. மன்ற தீர்மான எண்.532 நாள் 28.05.2018 ஆகும்.

இந்நிலையில் மேலும் இரண்டு இடங்களில் நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கவும்.அதற்கான மதீப்பீடு தொகை ரூ113.50 லட்சம் மான்யமாக ஒதுக்கீடு செய்ய வேண்டியும், நிர்வாக அனுமதி வேண்டியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (இ1/2711/2018)

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண் 40 PACR சாலையில் 5 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்க | ரூ 81.50 |
| 2. | இந்நகராட்சி அலுவலகம் பின்புறம் 2 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்க | ரூ 32.00 |
| | மொத்தம் | ரூ113.50 |

அ.கு

மேற்கண்ட இடங்களில் நுண் உரம் செயலாக்கம் மையம் அமைக்கவும் அதற்கான நிதி ரூ.113.50 லட்சம் மான்யமாக வழங்கவும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை–05 அவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.534அனுமதிக்கப்பட்டது**

4. இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் குடியிருப்பு வளாகத்தில் சுற்று சுவர் புதியதாக கட்டி பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் , மதிப்பீடு தொகை ரூ9.00 லட்சத்திற்கும் நிர்வாக அனுமதியும் மன்ற தீர்மானம் எண் 472 நாள் 28.03.2018 ம் அனுமதி வழங்கியதின் பேரில் 20.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்(இ1/3189/2018)

| வரிசை எண் | ஒப்பந்தகாரரின் விவரம் | மதிப்பீடு விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.C.பாஸ்கரன் | மதிப்பீட்டு தொகை விட –0.03% குறைவு |
| 2 | திரு.R.சோலைமலை பெருமாள் | மதிப்பீட்டு தொகை விட 0.47% அதிகம் |

அ.கு

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தங்களில் மதிப்பீட்டு தொகையை விட –0.03% சதவீதம் குறைவாக குடுத்துள்ள திரு.C.பாஸ்கரன் ஒப்பந்தகாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.535அனுமதிக்கப்பட்டது.**

5. இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி ஒப்பந்த அடிப்படையில் ஏற்கனவே பணி செய்து வரும் M/S .ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட் சென்னை நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு ஆணை கடந்த 30.04.2018 அன்றுடன் முடிவடைந்து விட்டது.

இந்நிலையில் தனியார் மூலம் தெருவிளக்குகள் இயக்கி பராமரிப்பு செய்யும் பணிக்கு புதிய ஒப்பந்தத்திற்கு 31.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அழைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே புதிதாக ஒப்பந்தப்புள்ளி பெற்று வேலை உத்தரவு வழங்கும் வரை ஏற்கனவே மேற்கொண்டு வரும் தெருவிளக்கு இயக்கி பராமரிப்பு செய்யும் பணியை தொடர வேண்டியுள்ளது.

எனவே 01.05.2018 முதல் 30.06.2018 வரை இரண்டு மாதங்கள் அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி பெற்று வேலை உத்தரவு வழங்கும் வரை எது முந்துகிறதோ அதுவரை ஏற்கனவே தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை தொடரவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.9,78,170/– (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து நூற்றி எழுபது) மட்டும் க்கு ஏற்கனவே பணி செய்து வரும் M/S .ஆகாஷ் இன்ஜினியரிங் அசோசியேட்ஸ் (பி) லிமிடெட் சென்னை நிறுவனம் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்தில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ2/3964/2012)

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மானம் எண்.536அனுமதிக்கப்பட்டது**

6. இராஜபாளையம் நகராட்சி அம்ரூத் திட்டத்தின் கீழ் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணி துவங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் மேல்நிலைத்தொட்டி அமையப்படவுள்ள இடங்களில் இடையூராக உள்ள உயிருள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்தும் பணிக்கு மூன்றாம் கட்ட அழைப்பாணையில் 25.05.2018 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டது. அப்போது கேட்கப்பட்ட அதிகபட்ச ஏலக்கேள்விகள் பின் வருமாறு.(இ2/5807/2009)

ஏலக்கேள்விகள் விபரம்–

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலக்கேள்வி விலை விகிதம் (கேட்கப்பட்ட அதிகபட்ச ஏலக்கேள்வித்தொகை) |
|---|---|---|
| 1 | திரு.பி.ராதாகிருஷ்ணன்<br>172 , சம்மந்தபுரம் தெரு, இராஜபாளையம். | ரூ.13,000/– |
| 2 | திரு.எஸ்.முருகன்<br>115a, கட்டபொம்மன் தெரு, இராஜபாளையம். | ரூ.12,500/– |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேல்நிலைத்தொட்டி அமையப்படவுள்ள இடங்களில் இடையூராக உள்ள உயிருள்ள மரங்களை அப்புறப்படுத்த இந்நகர்மன்ற தீர்மானம் எண் 405 நாள் 29.01.2018 ல் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் அனுமதி பெற்று வெட்டி அப்புறப்படுத்த அனுமதி வழங்கியதன் பேரில் சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ4/361/18 நாள்–17.02.2018 ன் மூலம் மரங்களை வெட்ட உரிய அனுமதி பெறப்பட்டுள்ளது.
3. அதன் பேரில் ஏல அறிவிப்பு கோரியதில் மூன்றாம் கட்ட அழைப்பாணையின் போது இருவர் மட்டும் ஏலம் கேட்டதில் திரு.பி.ராதாகிருஷ்ணன் என்பவர் கேட்ட ஏலத்தொகை ரூ.13,000/– அதிகபட்ச ஏலத்தொகையாக உள்ளது.

   மேற்கண்ட மரங்கள் உடனடியாக வெட்டி அப்புறப்படுத்திய பின் தான் குடிநீர் திட்டத்தில் மேல்நிலை தொட்டி கட்டும் பணி துவங்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் உயர்ந்த ஏலத்தொகை ரூ.13000/– மட்டும் கேட்டுள்ள திரு.பி.ராதாகிருஷ்ணன் அவர்களின் ஏலக் கேள்வியினை மன்றம் ஏற்கலாம்.
4. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தபுள்ளி ஏலதாரருக்கு மரங்களை வெட்டி எடுத்துக் கொள்ள அனுமதி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.537அனுமதிக்கப்பட்டது**

7. இராஜபாளையம் நகராட்சி பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்யும் பணி தனியார் மூலம் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு Accord advertising agencies நிறுவனத்தார் மூலம் கீழ்க்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது(இ2/3641/2017)

| | | |
|---|---|---|
| தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தமிழ்நாடு | = | ரூ.48750 |
| மக்கள் குரல் – தமிழ்நாடு | = | ரூ.33750 |
| | | ரூ.82500 |
| CGST 2.5% | | **2062.50** |
| **SGST 2.5%** | | **2062.50** |
| மொத்தம் | = | 86625.00 |

ரூ . 86,625/– மட்டும் (ரூபாய் எண்பதாயிரத்து அறுநூற்றி இருபத்தைந்து) M/s Accord advertising agencies நிறுவனத்தார்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மானம் எண்.538அனுமதிக்கப்பட்டது**

8.இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 20 ஆவது வார்டு மலையடிப்பட்டி குலாலர் தெருவில் பழுதடைந்த சிறுபாலம் மற்றும் வடிகாலினை பழுது நீக்கம் செய்யவும் , அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.42000/– (ரூபாய் நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதியும் இப்பணியினை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.சி.பாஸ்கரன் என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைத்து செய்து முடிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.539அனுமதிக்கப்பட்டது**

9.இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 35 ஆவது வார்டு மங்காபுரம் தெருவில் மாட்டுக் கொட்டம் கீழ்புறம் உள்ள சந்தில் மழைகாலத்தில் மழைநீர் தேங்கி பொது மக்கள் நடந்து செல்ல பெரும் இடையூராக உள்ளது மேற்படி சந்தில் பிரதான சாலை மட்டத்திற்கு சிமெண்ட் சாலையினை உயர்த்தி அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.48000/– (ரூபாய் நாற்பத்தி எட்டாயிரம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதியும் இப்பணியினை இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.சி.பாஸ்கரன் என்பவர் மூலம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்படைத்து செய்து முடிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.540அனுமதிக்கப்பட்டது**

**10.** இந்நகராட்சி அலுவலகம் பின்புறம் உள்ள பழைய சிதலமைந்த ac sheet யுடன் கூடிய மேற்கூரை கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதாலும் தற்போது மேற்படி கட்டிடம் பயன்பாடற்ற நிலையில் உள்ளதாலும் , கட்டிடத்தின் உறுதி தன்மையை நிர்ணயம் செய்ய முடியவில்லை என்பதாலும் மேற்படி கட்டிடத்தை முழுமையாக இடித்துவிட்டு மேற்படி இடத்தில் நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கலாம் என கருதுவதாலும் , மேற்படி கட்டிடத்தை இடிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(இ1/3239/2018)

அ.கு—

1. மேற்படி கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாலும் , பயன்பாடற்ற நிலையில் உள்ளதாலும் அதன் உறுதி தன்மையை நிர்ணயம் செய்ய இயலவில்லை என்பதாலும் , மேற்படி கட்டிடத்தை முழுமையாக இடித்து விட்டு 2 மெட்ரிக் டன் திறனுடைய நுண் உரம் செயலாக்க மையம் அமைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.541அனுமதிக்கப்பட்டது**

**11.** இராஜபாளையம் நகராட்சி தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்படவுள்ள 5.00 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி கட்டப்படவுள்ள இடத்தில் பணி செய்ய இடையூராக உள்ள பழைய கட்டிடங்களை அகற்றி ஒப்படைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் இந்நகராட்சி ஜவஹர் மைதானத்தில் உள்ள பழைய கழிப்பிடம் 307.07 சமீ பரப்பில் சுமார் 22 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கழிப்பிட கட்டிடத்தை புதிய மேல்நிலைத்தொட்டி கட்டும் பணி மேற்கொள்ள ஏதுவாக முழுமையாக இடித்து அப்புறப்படுத்தி கொடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(இ1/5807/2009)

அ.கு—

1. தற்போது தாமிரபரணி கூட்டுக்குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதியதாக மேல்நிலைத்தொட்டி அமைக்க ஏதுவாக பழைய கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.542அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை இனங்களை அரசாணை எண் 181 நாள் 19.09.2008 ன் படி மூன்று ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமைக்கு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (அ1/947/2015)

| வ.எண் | குத்தகை இனம் | ஏல டேவணித்தொகை |
|---|---|---|
| 1 | பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாக கட்டிடம் அருகில் உள்ள நகராட்சி கட்டணக்கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2,00,000 |

| | | |
|---|---|---|
| 2 | புதிய பேருந்து நிலையத்தில் வடபுறம் மற்றும் தென்புறம் ஆண்கள் மற்றும் பெண்கள் கட்டணக்கழிப்பறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 5,00,000 |
| 3 | பழைய பேருந்து நிலையத்தில் தலைச்சுமையாக தட்டில் வைத்து அதிரசம், பால்கோவா, இஞ்சிமுறப்பா, மற்றும் சம்சா விற்பணை | 1,00,000 |
| 4 | புதிய பேருந்து நிலையத்தில் தலைச்சுமையாக தட்டில் வைத்து அதிரசம், பால்கோவா, இஞ்சிமுறப்பா, மற்றும் சம்சா விற்பணை | 40,000 |
| 5 | நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் தேக்க தொக்க எண் 3ல் உள்ள தென்னை மரங்களின் மேல் மகசூல் பலனை மட்டும் அனுபவிக்கும் உரிமம். | 10,000 |
| 6 | பழைய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமம் | 40,000 |
| 7 | புதிய பேருந்து நிலையத்தில் பூ விற்பனை செய்யும் உரிமம் | 40,000 |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியினை விளம்பரம் செய்யும் செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்
3. ஆணையாளர்/ தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததிற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.543அனுமதிக்கப்பட்டது**

**13)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள அனைத்து கடைகளுக்கும் மாத வாடகைக்கு நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது மற்றும் ஏல நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு பின் 9 ஆண்டு வரை ஏல உரிமைதாரர்கள் விரும்பினால் நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று குத்தகை தொகையில் 15 சதவீதம் உயர்த்தப்பட்டு குத்தகை நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (அ1/947/2015)

| வ.எண் | குத்தகை கடையின் விவரம் | ஏல டேவணித்தொகை |
|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை எண்–22 | 75,000 |
| 2 | புதிய பேருந்து நிலைய கடை எண்–23 | 75,000 |
| 3 | புதிய பேருந்து நிலைய கடை எண்–23a | 75,000 |
| 4 | புதிய பேருந்து நிலைய கடை எண் (மாற்றுத்திறனாளி)– 27 | 40,000 |
| 5 | புதிய பேருந்து நிலைய அசைவ உணவு விடுதி | 4,00,000 |
| 6 | புதிய பேருந்து நிலைய கடை எண்–35 ன் கீழ்ப்புறம் உள்ள அறை | 75,000 |
| 7 | புதிய பேருந்து நிலைய கடை எண்–10a | 75,000 |
| 8 | புதிய பேருந்து நிலைய கடை எண்–21 | 75,000 |

| | | |
|---|---|---|
| 9 | கம்மாளர் மடம் ரோடு பெட்டிக்கடை 8×10 அளவில் | 50,000 |

அ.கு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியினை விளம்பரம் செய்யும் செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்
3. ஆணையாளர்/ தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததிற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.544அனுமதிக்கப்பட்டது**

14. இராஜபாளையம் நகராட்சி அலுவலக இருப்பு அறை மற்றும் வளாகப்பகுதியில் சேகரம் செய்யப்பட்டுள்ள பழைய பயன்படுத்த இயலாத அடிபம்பு உதிரி சாமான்கள் மற்றும் இரும்பு பொருட்கள் எடை அடிப்படையில் ( கிலோ ஒன்றுக்கு) பொது ஏலத்தில் விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பொருட்கள் விபரம்–

| | | |
|---|---|---|
| 1 | 32mm Q1 பைப் | 983 எண்ணம் |
| 2 | ball bearing | 141 எண்ணம் |
| 3 | chain wilf coupling | 286 எண்ணம் |
| 4 | 12×50 hex coupler | 305 எண்ணம் |
| 5 | 32mm Q1 coupling | 528 எண்ணம் |
| 6 | hand axile | 83 எண்ணம் |
| 7 | chain bolt nut | 102 எண்ணம் |
| 8 | 12mm×40mm bolt nut | 468 எண்ணம் |
| 9 | lower valve guide | 75 எண்ணம் |
| 10 | head assembly set | 39 எண்ணம் |
| 11 | pump stand | 26 எண்ணம் |
| 12 | upper valve guide | 162 எண்ணம் |
| 13 | reducer gap | 139 எண்ணம் |
| 14 | cylinder assembly | 108 எண்ணம் |
| 15 | water tank | 43 எண்ணம் |
| 16 | ½ ‘’ connecting rod | 397 எண்ணம் |
| 17 | dumber placer bin | 8 எண்ணம் |
| 18 | ms door small | 22 எண்ணம் |
| 19 | ms door big | 2 எண்ணம் |
| 20 | grill gate | 1 எண்ணம் |
| 21 | top sheet | 1 எண்ணம் |
| 22 | table | 1 எண்ணம் |

அ.கு–

1. அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பழைய இரும்பு பொருட்கள் அகற்றும் போது ஏதேனும் பழைய இரும்பு பொருட்கள் கண்டறியப்பட்டால் அவைகளையும் அதிக பட்ச ஏலத் கேள்வியாக கிலோ ஒன்றுக்கு கேட்கப்படும் நிர்ணய விலையில் ஏலதாரர் தொகை செலுத்திய பின்னர் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.545அனுமதிக்கப்பட்டது**

ஒம்/க.அச்சையா
தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
இராஜபாளையம் நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்(கூ.பொ)
இராஜபாளையம் நகராட்சி